செ.வெ.எண்: 32 நாள்: 15.10.2021

பெரம்பலூர் மாவட்டம்

**சாத்தனூர் கல்மரம் அமைந்துள்ள பகுதியில் புதைபடிவங்கள் குறித்து மாணவ,மாணவிகள் மற்றும் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில், கல்மரம் விளக்க மையத்தை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள், அருங்காட்சியகத்தை மாநில திட்டக்குழு துணைத்தலைவர் முனைவர் ஜெ.ஜெயரஞ்சன் அவர்கள், சிறுவர் பூங்காவை ஆலத்தூர் ஒன்றியக்குழு தலைவர் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆகியோர் திறந்து வைத்தார்கள்.**

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சாத்தனூரில் கல்மரம் அமைந்துள்ள பகுதியில் புதைபடிவங்கள் குறித்து மாணவ,மாணவிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் கல்மரம் விளக்க மைய திறப்பு விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (15.10.2021) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் கலந்து கொண்டு கல்மர விளக்க மையத்தினையும், மாநில திட்டக்குழு துணைத்தலைவர் முனைவர் ஜெ.ஜெயரஞ்சன் அவர்கள், அருங்காட்சியகத்தையும், ஆலத்தூர் ஒன்றியக்குழு தலைவர் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சிறுவர் பூங்காவையும் திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ம.பிரபாகரன் அவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திரு.சி.ராஜேந்திரன் அவர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

**அதன் விபரம் பின்வருமாறு:**

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இப்பகுதி கடலுக்கு அடியில் இருந்தது. அப்போது வாழந்து வந்த கடல்வாழ் உயிரினங்கள், தாவரங்கள், மரங்கள் ஆகியன காலப்போக்கில் புதையுண்டு படிமங்களாக மாறின. புவியியல் ரீதியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போது, இப்படிமங்களின் முக்கியத்துவம் குறித்து உலகிற்குத் தெரியவந்தது. சாத்தனூரில் உள்ள கல்லுருவாகிய பெரிய அடிமரம் ஏறத்தாழ 10 கோடி ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். "கோனிபர்ஸ்" வகையைச் சார்ந்த (பூக்கள் தோன்றாத) இந்த அடிமரம் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த புகழ்பெற்ற புவியியலாளர் டாக்டர்.ஆ.ளு.கிருஷ்ணன் அவா்களால் 1940-ஆம் ஆண்டு கண்டறியப்பட்டது. இந்த கல்லுருவான மரத்தை நமது நாட்டின் பல பகுதிகளிலிருந்து மாணவர்கள், அறிவியலாளா்கள், புவியியலாளா்கள் மற்றும் பல வெளிநாட்டவரும் காண்பதற்கு வந்து செல்கின்றனா். இவா்களின் வசதிக்காக ஒரு பயணியர் தங்குமிடமும், ஓர் அருங்காட்சியகமும் ரூ.50.50 இலட்சம் செலவினத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களும், மாணவ,மாணவியரும் பயன்பெறும் வகையிலும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொல்லுயிர், கல்மரப் படிமங்கள் குறித்து உலகிற்குத் தெரியப்படுத்தும் விதமாகவும், தேசியப் பொக்கிஷமான இப்படிமங்களைப் பற்றித் தெரிந்து கொண்டு பெருமை கொள்வதற்கும், தற்போது உருவாக்கப்பட்டுள்ள இச்செயல் விளக்கமையம் துணை புரியும். இம்மையத்தில், சாத்தனூருக்கு மரம் வந்தடைந்து கல்லாக மாறிய படக்கதை, அண்டத்தின் தோற்றம் மற்றும் பெருவெடிப்பு கோட்பாடு குறித்து எளிய முறை விளக்கம், உயிரின தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய அண்ட நாட்காட்டி, கண்டங்கள் உருவான விதம், மலைகளின் தோற்றம் மற்றும் மனித பரிணாமம் குறித்த விளக்கங்கள் ஆகியனப் பற்றி தனித்தனி அரங்கங்கள் குழந்தைகள் மற்றும் மாணவர்கள் மட்டுமின்றி பொதுமக்கள் அனைவரையும் கவரும் வண்ணம் சிறப்பான முறையில் நிறுவப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தின் புவியியல் தொன்மை குறித்த பெருமையை பறை சாற்றும் வண்ணம் இம்மையம் விளங்கும்.

**மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:**

சாத்தனூர் கல்மர பூங்காவின் பெருமைகளை எடுத்துரைக்கும் வகையில் அதன் தோற்றம், அதன் அமைப்பு உள்ளிட்டவைகள் குறித்து படமாக வடிவமைக்கப்பட்ட ஒரு அருங்காட்சியகம் திறக்கப்பட்டுள்ளது. தொண்மை காலத்தில் கடல் உட்புகுந்து இந்த பகுதியை முழுமையாக ஆட்கொண்டு அதனால் ஏற்பட்ட படிமங்கள்தான் நம் பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில்

இன்று காட்சிப்படுத்தப்பட்டுள்ள அருங்காட்சியகத்தில் இடம் பெற்றிருக்கிறது. சாத்தனூர் கல்மர பூங்கா 1940ல் டாக்டர்.ஆ.ளு.கிருஷ்ணன் என்ற ஆய்வாளரால் கண்டறியப்பட்டு, பிறகு தமிழக அரசு படிபடியாக அதனை மக்களின் பார்வைக்கு கொண்டு வரப்பட்டு இன்று அது ஒரு பூங்காவாகவும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. இந்த பகுதியின் வரலாற்றினை முழுமையாக மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் படக்காட்சியாக அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல் இந்த பகுதியில் உள்ள புதைபடிவங்கள்(FOSSILS) காரை மற்றும் கூத்தூரிலிருந்து அரியலூர் மாவட்டத்தில் உள்ள பகுதிகள் வரை கடல் கொண்டு அதனால் ஏற்பட்ட அந்த படிவங்களையெல்லாம் சேகரித்து ஒரு அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த சட்டமன்ற நிதிநிலை அறிக்கையில் பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் உள்ள புதைவடிவ புவியியல் பூங்காவினை பாதுகாக்க ரூ.10 கோடி நிதி ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் தொடக்கமாக இந்த நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார்கள். முதல்கட்டமாக இந்த பகுதியில் உள்ள மாணவர்கள் வந்து பார்த்து செல்வதற்கு ஏற்பாடு செய்யப்படும். அதேபோல் இதன் வீடியோ வடிவிலான காட்சியகமும் தொடர்ச்சியாக நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எதிர்காலத்தில் பெரிய சுற்றுலாதளமாக நம்முடைய பூமியின் தொல்லியல் வரலாற்றினை தெரிந்து கொள்ளும் அளவிற்கு குறிப்பாக நமது பெரம்பலூர் மாவட்டத்தின் புதைவடிவ புவியியல் அமைப்பினை தெரிந்து கொள்வதற்கு இது ஒரு அடிப்படை வசதியாக அமையும். கல்மர விளக்க மையத்தினை, இந்த பகுதியில் இருக்கும் சமூக ஆர்வலர்களுக்கு இது குறித்து புரிதல் ஏற்படுத்தி அவர்களின் மூலம் முதல்கட்டமாக மாணவ, மாணவிகளுக்கு விளக்கப்படும். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இந்த பகுதியில் உள்ள தொண்மையான விஷயங்களையெல்லாம் சேகரித்து அதனை வெளியுலகத்தின் பார்வைக்கு கொண்டு வருவதில் ஆர்வமாக செயல்பட்டு வருகிறார்.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி நா.அங்கையற்கண்ணி, திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திருமதி அ.லலிதா, உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) திரு.பாரதிதாசன், ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர்கள் திருமதி மீனா அண்ணாதுரை(பெரம்பலூர்), திரு.ராமலிங்கம் (வேப்பந்தட்டை) ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவர்(ஆலத்தூர்) திருமதி மு.சுசிலா, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் (ஆலத்தூர்) திருமதி க.அருள்செல்வி, ஊராட்சிமன்ற தலைவர்(சாத்தனூர்) திரு.எஸ்.குழந்தைவேல் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், பெரம்பலூர் மாவட்டம்.**